# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 03.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12671/F/2023**

திரு. S.L.பாலகிருஷ்ணன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய்கோட்டாட்சியரின் நேர்முகஉதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருப்பத்தூர்-635 601

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 24.04.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.06.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.07.2023 |

*******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட இவ்வழக்கு இன்று (03.04.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. S.L.பாலகிருஷ்ணன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி இரா.செண்பகவள்ளி வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் இந்து குருமன்ஸ் பழங்குடியினர் இன சான்றிதழ் வழங்க வேண்டி நாட்றம்பள்ளி வட்டாட்சியரித்தில் மனு அளித்திருந்தேன் என்பது போன்ற முழு விவரங்களை 3 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.04.2025) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண். ப.மு.அ2/1597/2023 நாள் 25.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்க இருப்பதாக தெரிவித்து அதற்கான ஆவண நகல்கள் மற்றும் மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான மனநிறைவு கடிதத்தின் நகலினையும் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/(மா.செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12671/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய்கோட்டாட்சியரின் நேர்முகஉதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்-635 601

**<u>மனுதாரர் SA 12671/F/2023</u>**

திரு. S.L.பாலகிருஷ்ணன்
த/பெ லிங்கன்,
514/5,காந்திநகர்,
மேட்டுத்தோட்டம்,
போத்தனூர்,
கோயமுத்தூர்-641 023

Copy to: File
VPS /PA /15.04.2025